**எல்பிடிய பிரதேச சபை**
**காலி மாவட்டம்**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

2018 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2019 மார்ச் 29 ஆந் திகதி கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன், அந் நிதிக்கூற்றுக்கள் மீது கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பொழிப்பு அறிக்கை 2019 மே 30 ஆந் திகதியும், விரிவான முகாமைத்துவ அறிக்கை 2019 ஜூன் 14 திகதியும் தலைவருக்கு அனுப்பப்பட்டது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இவ்வறிக்கையில் முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை பகுதியில் விவரிக்கப்பட்டுள்ள விடயங்களின் தாக்கத்தினை தவிர்த்து எல்பிடிய பிரதேச சபையின் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

#### (அ) கணக்கீட்டு குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (i) | கடந்த ஆண்டு ரூபா 1,803,186 தொகை செலவிடப்பட்டு பூர்த்தி செய்யப்பட்ட கட்டிடங்களின் பெறுமதி மூலதனப்படுத்தப்பட்டிருக்கவில்லை. | நிலையான சொத்துக்களை மூலதனப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | எதிர்காலத்தில் சரி செய்வதற்கு நடவடிக்கை எடுப்பேன். |
| (ii) | மீளாய்வாண்டின் போது ரூபா 34,900 தொகைக்கான தகனகூட உபகரணங்களின் பெறுமதியை மூலதனப்படுத்தி இருக்கவில்லை. | நிலையான சொத்துக்களை மூலதனப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | எதிர்காலத்தில் சரி செய்வதற்கு நடவடிக்கை எடுப்பேன். |
| (iii) | மீளாய்வாண்டின் போது பூர்த்தி செய்யப்பட்ட நிர்மாண வேலைகள் தொடர்பாக செலுத்த வேண்டிய ரூபா 173,295 தொகைக்கான தடுத்து வைத்தல் பணம் வைப்புக் கணக்கு ஒன்றில் கணக்கீடு செய்திருக்கவில்லை. | வைப்புக்கள் சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். | எதிர்காலத்தில் சரி செய்வதற்கு நடவடிக்கை எடுப்பேன். |
| (iv) | மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு உள்ளுராட்சி ஓய்வூதிய நிதியத்திற்கு செலுத்த வேண்டிய ரூபா 7,649,482 இற்கான பங்களிப்புத் தொகையினை கணக்கீடு செய்திருக்கவில்லை. | செலுத்த வேண்டிய தொகைகளை கணக்கீடு செய்ய வேண்டும். | ஓய்வூதியத் திணைக்களத்தை வினவி பதில் கிடைத்ததும் சரி செய்வேன். |

| | | | |
|---|---|---|---|
| (v) | மீளாய்வாண்டிற்கான கணக்காய்வுக் கட்டணத்துக்காக ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | கணக்காய்வுக் கட்டணத்திற்காக ஏற்பாடுகள் மேற்கொள் ளப்பட வேண்டும். | 2019 கணக்காய்வுக் கட்டணத்திற்காக ஒதுக்கங்கள் மேற்கொள்ள நடவடிக்கை எடுப்பேன். |

**(ஆ) இணக்கஞ் செய்யப்படாத கணக்குகள்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோ கத்தரின் கருத்துரை |
|---|---|---|
| நிதிக்கூற்றுக்களில் அடங்கியுள்ள கூட்டுத் தொகை ரூபா 26,435,185 தொகைக்கான 06 கணக்கு விடயங்கள் தொடர்பான மீதிகள் மற்றும் அவற்றுடன் தொடர்புடைய துணைப் பதிவேடுகள் மற்றும் அறிக்கைகளில் காட்டப்பட்டுள்ள மீதிகளிடையே வித்தியாசங்கள் காணப்பட்டதுடன், அவதானிக்கப்பட்ட வித்தியாசங்களின் தேறிய கூட்டுத்தொகை ரூபா 1,775,086 தொகையாகும். | குறிப்பிட்ட மீதிகளின் வித்தியாசங்களை இணக்கஞ் செய்து சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | எதிர்காலத்தில் சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுப்பேன். |

**(இ) பெற வேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்**

**(i) பெற வேண்டிய கணக்குகள்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோ கத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மூன்று வருடங்கள் முதல் முன்கொண்டு வந்து காணப்படும் பெக்கோ இயந்திர வருமானம் ரூபா 208,280 தொகை மற்றும் சந்தை வாடகை வருமானம் ரூபா 18,537 தொகை அறவீடு செய்வதற்கு மீளாய்வாண்டின் போதும் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | பெறவேண்டிய வருமானத்தை அறவீடு செய்ய வேண்டும். | வருமானம் அறவிடுதல் தொடர்பாக தொடர்ந்து அறிவுறுத்தப்பட்டது. எதிர்காலத்தில் அறவீடு செய்ய நடவடிக்கை எடுப்பேன். |

**(ii) செலுத்த வேண்டிய கணக்குகள்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோ கத்தரின் கருத்துரை |
|---|---|---|
| கடந்த ஆண்டுகளில் பூர்த்தி செய்யப்பட்டிருந்த 08 அபிவிருத்தி செயற்திட்டங்களுக்காக செலுத்த வேண்டிய கூட்டுத்தொகை ரூபா 1,514,423 தொகை வருட இறுதி அளவிலும் தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | செலுத்த வேண்டிய தொகையை தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | இந்த செயற்திட்டம் எதிர்காலத்தில் செயற்படுத்துவதற்கு தீர்மானித்துள்ளோம். |

**(ஈ) கணக்காய்விற்குத் தேவையான சான்றுகள் இன்மை**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| தேவையான தகவல்கள் சமர்ப்பிக்கப் படாமையால் கூட்டுத்தொகை ரூபா 104,766,698 தொகைக்கான நிலையான சொத்துக்கள் மற்றும் கூட்டுத்தொகை ரூபா 488,912 தொகைக்கான இருப்பு தொடர்பாக கணக்காய்வின் போது திருப்திகரமாக பரிசோதனை மேற்கொள்ள முடியாதிருந்தது. | நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்த கணக்கு மீதிகளை உறுதிப்படுத்தும் சான்றுகள் சமர்ப்பிக்கப்பட வேண்டும். | எதிர்காலத்தில் சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுப்பேன். |

**1.4 இணக்கமின்மைகள்**

**சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணக்கமின்மை**

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் தொடர்பு | இணக்கமின்மை | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| 2002 நவம்பர் 28 ஆம் திகதிய IAI/2002/02 இலக்கங் கொண்ட திறைசேரிச் சுற்றறிக்கை | சபைக்குச் சொந்தமான ரூபா 1,285,492 தொகை பெறுமதியான கணினிகள், துணைக் கருவிகள் மற்றும் மென்பொருட்கள் தொடர்பான நிலையான சொத்துக்கள் பதிவேடு ஒன்று பேணப்பட்டிருக்கவில்லை. | சுற்றறிக்கை ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். | எதிர்காலத்தில் சரி செய்ய நடவடிக்கை எடுப்பேன். |

**2. நிதி மீளாய்வு**

**2.1 நிதி விளைவுகள்**

கணக்காய்விற்குச் சமர்பிக்கப்பட்டிருந்த நிதிக்கூற்றுகளின் பிரகாரம் 2018 திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமான ரூபா 25,251,341 தொகையாகக் காணப்பட்டதுடன், அதற்கு நேரொப்ப முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 14,664,054 தொகை ஆகக் காணப்பட்டது.

## 2.2 நிதிக் கட்டுப்பாடு

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| சபையினால் பேணப்பட்டு வரும் நிர்மாண வேலை நடைமுறைக் கணக்கில் ரூபா 1,248,008 தொகை மற்றும் பொது நடைமுறைக் கணக்கில் ரூபா 3,663,036 இற்கான சராசரி மாதாந்த மீதியொன்று காணப்பட்ட துடன், 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைச் சட்டத்தின் பிரிவு 131 இன் பிரகாரம் மிகையாக உள்ள பணத்தை முதலீடு செய்வதன் மூலம் சபைக்கு பெற்றுக்கொள்ளக் கூடியதாக இருந்த வருமானத்தை பெற்றுக் கொள்வதற்கு சபை நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | சட்டத்தின் பிரகாரம் பணத்தை முதலீடு செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும். | எதிர்காலத்தில் சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுப்பேன். |

## 2.3 வருமான நிருவாகம்

### 2.3.1 மதிப்பீட்டு வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டு தொடர்பாக சமர்ப்பித்திருந்த மதிப்பீட்டு வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| வருமான மூலம் | 2018 | | | | 2017 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | மதிப்பீட்டு வருமானம் | சிட்டையி டப்பட்ட வருமானம் | சேகரிக்க ப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு மொத்த நிலுவை | மதிப்பீட்டு வருமானம் | சிட்டையி டப்பட்ட வருமானம் | சேகரிக்க ப்பட்ட வருமானம | திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு மொத்த நிலுவை |
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| வீதவரி மற்றும் வரி | 3,077,000 | 3,193,888 | 1,648,687 | 13,560,759 | 3,153,000 | 3,114,307 | 2,065,298 | 11,664,450 |
| வாடகை | 2,060,000 | 2,059,200 | 2,408,550 | 2,958,117 | 2,060,000 | 2,059,200 | 1,267,448 | 3,164,902 |
| அனுமதிப் பத்திரக் கட்டணம் | 900,000 | 977,459 | 906,965 | 93,054 | 900,000 | 983,270 | 991,430 | 22,560 |
| ஏனைய வருமானங்கள் | 12,500,000 | 24,237,553 | 17,500,000 | 21,442,450 | 12,500,000 | 12,500,000 | 8,469,773 | 14,703,978 |
| | 18,537,000 | 30,468,100 | 22,464,202 | 38,054,380 | 18,613,000 | 18,656,777 | 12,793,949 | 29,555,890 |

### 2.3.2 வருமானம் சேகரித்தல் செயலாற்றல்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டின் போது அறவிடப்பட வேண்டிய மொத்த வருமானம் ரூபா 60,023,990 தொகை எனினும், ஆண்டின் போது சேகரிக்கப்பட்ட மொத்த வருமானம் ரூபா 22,464,202 தொகையாக இருந்தமையால் வருட இறுதியில் உள்ளவாறு ரூபா 38,054,380 இற்கான நிலுவை மீதியொன்று காணப்பட்டது. | நிலுவை வருமானம் அறவீடு செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும். | எதிர்காலத்தில் சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுப்பேன். |

### 2.3.3 வீதவரியும் வரியும்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டின் போது அறவீடு செய்யப்பட வேண்டிய மொத்த வருமானம் ரூபா 14,858,338 தொகை எனினும், ஆண்டின் போது மொத்த அறவீடு ரூபா 1,648,687 தொகையாக காணப்பட்டமையால் வருட இறுதியில் உள்ளவாறு ரூபா 13,560,759 இற்கான நிலுவை மீதியொன்று காணப்பட்டது. | நிலுவை வீதவரி அறவீடு செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும். | எதிர்காலத்தில் நிலுவை வீதவரி குறைப்பதற்கு நடவடிக்கை எடுப்பேன். |

### 2.3.4 வாடகை

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டின் போது ரூபா 5,224,102 தொகை அறவிடப்பட வேண்டியிருந்த போதிலும், ஆண்டின் போது மொத்த அறவீடு ரூபா 2,408,550 தொகை ஆக இருந்தமையால் வருட இறுதியில் உள்ளவாறு மேலும் ரூபா 2,958,117 இற்கான நிலுவை ஒன்று காணப்பட்டது. | நிலுவை வருமானம் அறவீடு செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும். | எதிர்காலத்தில் சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுப்பேன். |

### 2.3.5 நீதிமன்றத் தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணம்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மாகாண சபையின் பிரதான செயலாளரிடம் மற்றும் ஏனைய அதிகாரிகளிடம் 2018 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு முத்திரைக் கட்டணம் ரூபா 17,998,134 தொகை மற்றும் நீதிமன்றத் தண்டப் பணம் ரூபா 3,444,316 தொகை பெறவேண்டி இருந்தது. | பெற வேண்டிய வருமானத்தை சேகரிப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | எதிர்காலத்தில் சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுப்பேன். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயலாற்றுகை

பிரதேச சபைச் சட்டத்தின் 3 ஆம் பிரிவின் கீழ் மக்கள் சுகாதாரம், பொது பயன்பாட்டு சேவை மற்றும் பொது பாதைகள் மீதான கருமங்களை முறைப்படுத்தலும் கட்டுப்படுத்துதலும் பொதுமக்களின் சுகபோக வாழ்க்கை, வசதிகள் மற்றும் நலன்புரி ஆகிய சபையினால் நிறைவேற்றப்பட வேண்டியிருந்த செய்பணிகளை நிறைவேற்றுவது தொடர்பாக கண்டறியப்பட்ட விடயங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

#### (அ) செயல் நடவடிக்கைத் திட்டம்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| விதிக்கப்பட்டிருந்த துணை விதியின் பிரகாரம் சபையினால் நிறைவேற்றப்பட வேண்டியிருந்த செய்பணிகள் தொடர்பாக வருடாந்த செயல் நடவடிக்கைத் திட்டம் ஒன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | துணை விதிகளின் படி வருடாந்த செயல் நடவடிக் கைத் திட்டம் தயாரிக்கப்பட வேண்டும். | சரி செய்வதற்கு நடவடிக்கை எடுப்பேன். |

### (ஆ) நிலைபேறான அபிவிருத்தி இலக்கு

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| நிலைபேறான அபிவிருத்திக்கான 2030 நிகழ்ச்சி நிரலில், நிலைபேறான அபிவிருத்திக் குறிக்கோள்கள் மற்றும் இலக்குகளுக்கான உலகலாவிய சுட்டிகள் மூலம் சபையின் அதிகாரப் பிரசேத்தில் பொது மக்களின் வாழ்க்கை நிலை மற்றும் சுகாதாரத்தை மேம்படுத்துவதற்கான நீண்டகாலத் திட்டங்கள் சபையினால் தயாரித்திருக்கவில்லை. | நிலைபேறான அபிவிருத்திக் கான நீண்ட காலத்திட்டங்கள் தயாரிக்கப்பட்டு பொது மக்களின் வாழ்க்கை நிலை உயர்த்த வேண்டும். | அதிகாரப் பிரதேசத்தில் பொது மக்களின் வாழ்க்கை நிலையை உயர்த்துவதற்காக எதிர்காலத்தில் திட்டம் ஒன்று தயாரிக்கின்றேன். |

## 3.2 முகாமைத்துவத் திறமையின்மை

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| சபையின் 07 நூலகங்களில் காணாமல் போயிருந்த 1097 புத்தகங்களின் பெறுமதி ரூபா 101,007 பெறுமதி தொடர்பாக நி.பி.103 பிரகாரம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | காணாமல் போயிருந்த புத்தகங்கள் தொடர்பாக நிதிப் பிரமாணங்களின் படி நடவடிக்கை எடுக்க வேண்டும். | எதிர்காலத்தில் சரி செய்வதற்கு நடவடிக்கை எடுப்பேன். |

## 3.3 மனிதவள முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 2018 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு பதவியணித் திட்டத்தின் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியில் காணப்பட்ட 20 பதவி வெற்றிடங் களை நிரப்புவதற்கும் 07 மிகைப் பதவிகளை முறைப்படுத்துவதற்கும் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | வெற்றிடங்களை நிரப்புவதற்கும் மற்றும் மிகைப் பதவிகளை முறைப்படுத்து வதற்கும் நடவடிக்கை எடுக்க வேண்டும். | எதிர்காலத்தில் சரி செய்வதற்கு நடவடிக்கை எடுப்பேன். |

## 3.4 சொத்துக்கள் முகாமைத்துவம்

### 3.4.1 சொத்துக்கள் ஆவணப்படுத்தாமை

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| சபைக்குச் சொந்தமான 57 காணிகள் மற்றும் கட்டிடங்களை சரியாக இனங்கண்டு ஆவணப் படுத்தியிருக்காததுடன், அந்த ஆதனங்களை மதிப்பீடு செய்து பெறுமதியை இனங்காண்பதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | காணி கட்டிடங்கள் மற்றும் ஆதனங்களை சரியாக இனங்கண்டு பெறுமதியினை, பெறுமதி மதிப்பீடு செய் வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | 2019 ஆண்டின் போது ஆதனங்களின் கணிப்பீடு ஒன்று மேற்கொள்ளப் பட்டு வருகின்றது. |

### 3.4.2 வருடாந்த இருப்புக் கணிப்பீடு

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| எல்பிடிய சிறுவர் பூங்காவில் காணப்படும் பண்டங்களை ஆவணப் படுத்தியிருக்காததுடன், அந்தப் பண்டங்களுக்குப் பொறுப்பாக பொறுப்புதாரி ஒருவர் இன்மையால் பண்டங்களின் பாதுகாப்பு மற்றும் பராமரிப்பு அலுவல்கள் செயற்படாத நிலைமையில் காணப்பட்டது. பூங்காவுக்கு வழங்கியிருந்த மின் முறைமையும் இதன் காரணமாக பாதுகாப்பற்ற நிலையில் காணப்பட்டது. | சபையின் ஆதனங் களின் பாதுகாப்பு மற்றும் பராமரிப்பு அலுவல்கள் முறைப்படி மேற் கொள்ளப்பட வேண்டும். | எதிர்காலத்தில் சரி செய்வதற்கு நடவடிக்கை எடுப்பேன். |

### 3.4.3 வாகனப் பாவணை

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| ஓட்ட நிலையில் காணப்படாத 03 வாகனங்களை அப்புறப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | சுற்றறிக்கையின் பிரகாரம் அப்புறப் படுத்தவதற்கு நடவடிக்கை எடுக்கப் பட வேண்டும். | எதிர்காலத்தில் சரி செய்வதற்கு நடவடிக்கை எடுப்பேன். |

## 4. கணக்களிப் பொறுப்பும் நல்லாளுகையும்

### 4.1 பாதீட்டுக் கட்டுப்பாடு

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | 08 செலவு விடயங்களின் கூட்டுத் தொகை ரூபா 22,677,373 இற்கான சேமிப்புக் காணப்பட்டதுடன், அந்தப் பெறுமதிகள் 21 சதவீதம் முதல் 75 சதவீதம் வரை இடைப்பட்ட வீச்சில் காணப்பட்டது. | நடைமுறைச் சாத்தியமாக மதிப்பீடுகள் தயாரிக்கப்பட வேண்டும். | அடுத்த வருடம் இது தொடர்பாக கவனம் செலுத்துவேன். |
| (ஆ) | 03 வருமான விடயங்களில் பிரதிகூல மான முரண்களின் கூட்டுத்தொகை ரூபா 18,380,003 தொகை காணப்பட்ட துடன், அப்பெறுமதி 25 சதவீதம் முதல் 55 சதவீதம் வரை இடைப்பட்ட வீச்சில் காணப்பட்டது. | நடைமுறைச் சாத்தியமாக மதிப்பீடுகள் தயாரிக்கப்பட வேண்டும். | அடுத்த வருடம் இது தொடர்பாக கவனம் செலுத்துவேன். |

### 4.2 உள்ளகக் கணக்காய்வு

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் நிதிப் பிரமாணம் 133 மற்றும் 134 இன் மற்றும் உள்ளூராட்சி ஆணையாளரின் (தென்மாகாண) 2014 பெப்ரவரி 24 ஆந் திகதிய தபபா/யஹ/01/நா.ச.லே கொண்ட சுற்றறிக்கையின் பிரகாரம் உள்ளகக் கணக்காய்வு நிகழ்ச்சித் திட்டங்கள் தயாரிக்கும் போது கணக்காய்வாளர் தலைமை அதிபதியிடம் வினவி இருந்ததுடன், போதியளவு உள்ளகக் கணக்காய்வு ஒன்று மேற்கொண்டு அறிக்கைகளின் பிரதிகள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டு இருக்கவில்லை. | நிதிப் பிரமாணங்கள் மற்றும் சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். | எதிர்காலத்தில் சரி செய்வதற்கு நடவடிக்கை எடுப்பேன். |